★ திருச்சியில் திராவிடர் திரண்டனர்! ★

மாவட்ட மாநாட்டில் மட்டிலார்வப் புத்துணர்ச்சி!

தி. மு. கழக வரலாற்றின் மகிழ்ச்சிதரு முதல் அத்தியாயம்!

ஆடவர்-பெண்டிர்-மாணவர்-மூத்தோர் பதினையாயிரவரின் பெருமிதக் காட்சி!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை-அணு ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (2—1—50) வெளியூர் (3—1—50) [இதழ் 132

நகைச்சுவையரசின் இசைப்பாட்டுடன் மாநாடு ஆரம்பம்

திராவிட முன்னேற்றக் குழு வரலாற்றில் முதலிடம்பெறும் தனிப் பெரும் மாநாடாம் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு. சிறுஞ் சிறப்புடனும் பேரார்வம் புத்துணர்வுடன்-உற்சாக மிகு ஒத்துழைப்போடு ஜனவரி முதல் நாளன்று திருச்சி கருணாநிதி பார்க்கில், அழகும் அமைதியும் பெற்ற வேலாயுதம் பந்தலில், நடைபெற்றது. மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பெருந்திரளாக தோழர்கள் வந்திருந்து மாவட்ட மாநாட்டை மாகாண மாநாடு போன்றதொரு தோற்றமுறச் செய்தனர்.

திருச்சி நகர வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுவிட்ட இம் மாநாட்டுக்கு ஆர்வமிக்க கல்லிளைஞர்கள், பொறுப்புணர்ச்சி மிக்க மாணவ மணிகள், தன்மானப் போராட்டத்துக்கு எந்த விலையும் கொடுக்கத் தயங்கா வுளம் படைத்த தன்னுணர்வுத் தோழர்கள், தாய்மார்கள், மூத்தோர்கள் ஆகியோர் பல பகுதியினின்றும் ஆயிரக் கணக்கில் ஆர்வத்தோடு வந்து திரண்டிருந்தனர்.

மாநாட்டை வரவேற்றும், வெற்றிகர நிறைவேற்றத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தும் நாட்டின் பற்பல பகுதிகளினின்றும் பாராட்டுச் செய்திகள் வந்து குவிந்ததோடு, பம்பாய்—இலங்கை—நாஞ்சில் நாடு-கள்ளிக்கோட்டை—முதலிய இடங்களிலிருந்தும் வாழ்த்துத் தந்திகள் வந்து கொண்டிருந்தன.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு 1—1—1950 ஞாயிறு காலை 9-மணிக்கு துவங்கிற்று.

மாநாட்டுக்குப்பற்பலபகுதிகளினின்றும் 15,000-க்கு மேற்பட்ட மக்கள் வந்து கலந்து கொண்டிருந்தனர். பேருணர்ச்சி, பேரார்வம முகத்தில் பிரதிபலிக்க மூத்தோர்- இளையோர்-மாணவர்-தாய்மார் பெருமிதத்துடன் தோற்றமளித்தனர்.

துவக்கத்தில் மாநாட்டுத் தலைவர் தோழர் ஈ. வெ. அ வள்ளிமுத்து, திறப்பாளர் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி, தி.மு.க. பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை, திராவிட நாட்டு நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, மற்றும் கழகத் தோழர்கள் ஆகியோர் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்ததும், பெருத்த ஆரவாரமும், பெருமித வரவேற்பும் கைத்தட்டொலியும் கட்டிலடங்கா திருந்தது.

கழகக் கொடியை மாநாட்டுத் தலைவர் தோழர் வள்ளிமுத்து ஏற்றிவைத்த பின்பு, தலைவர்களனைவரும் மேடை மீது சென்றமர்ந்தனர்.

பின்னர், மாநாட்டுச் செயலாளர் தோழர் ஜி. பராங்குசம் மாநாட்டின் குறிக்கோளை எடுத்துக்கூறி, வந்திருந்தோரனைவரையும் மாநாட்டைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். தோழர் அம்பதானந்தம் திராவிடப் பண்பாடினார்.

அடுத்து, நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணனும், அவரது குழுவினரும் வில்லுப்பாட்டு முறையில், திராவிட இயக்கக் கொள்கைகள் பொதிந்த பாடல்களை சுமார் 45 நிமிட நேரம் பாடினர்.

பின்னர் மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் என். சங்கரனவர்கள், தனது வரவேற்புரையை நிகழ்த்தினார் (நாளை வரும்.)

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

தீர்மான ஆய்வுக் குழு

இரவு 12-30-க்குக் கூடிற்று

திருச்சி, ஜன. 1— திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டு தீர்மான ஆய்வுக் குழு கூட்டம் (Subjects Committee) 31-12-49 இரவு 12-30 மணிக்கு கருணாநிதி பார்க்கில் ஆரம்பமாகி, நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமை தாங்கினார்.

உறுப்பினர்கள் பலருடையவும் தீர்மானங்கள் விவாதிக்கப்பெற்று, முடிவு செய்யப்பட்ட பின், காலை நான்கு மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

தூய உளத்தோடு பாடுபட்டோரை துரோகிகளென்பதா?

இலட்சக் கணக்கில் நிதி திரட்டி இயக்கம் கண்ட பலன் என்ன?

"இலட்சியப் பாதையின் முதல் விளக்கை அணுகிவிட்டோம்!"

திருச்சி மாநாட்டில் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து தலைமையுரை

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள் நடைபெற்ற காலை கோவில்பட்டி நகராட்சி மன்றத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் நிகழ்த்திய மாநாட்டுத் தலைமையுரை:—

பேரன்புமிக்க பெரியோர்களே! தாய்மார்களே!! தோழர்களே!!!

இன்று நடைபெறும் நமது திராவிட முன்னேற்றக் கழகத் திருச்சி மாவட்ட முதல் மாநாட்டிற்குத் தலைமைதாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்ட வரவேற்புக் குழுவினருக்கும், இங்கு குழுமியுள்ள ஏனைய மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



காலச் சக்கரம் புரட்சிகரமாகச் சுழல்கிறது. புரட்சியெனினும் புதுமை மிக்கதாகக் காணப்படின் அது பலராலும் ஆதரிக்கப்படுவது இயல்பு. பல ஆண்டுகளாகப் பாடுபட்டு, இரத்தம் சிந்தி பொது வாழ்விலே எவரும் கண்டிராத இக்கட்டுகளையெல்லாம் தாண்டி, நமது உழைப்பின் உறுபயனும் உண்டாக்கப்பட்ட "திராவிடர் கழகம்" எனும் கோட்டை இன்று நம்மால் காலி செய்யப்பட்டு விட்டது. காரணம்? எந்தக் கொள்கைக்காக நம்மையெல்லாம் மக்களாகவும், தன்னைத் தந்தையாகவும் பெரியார் அவர்கள் கருதி நடந்து வந்தாரோ, எந்தக் கொள்கைக்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துள்ளதாகக் கூறினாரோ எந்தக் கொள்கைக்காகப் பொதுமக்களிடமிருந்து மூர்க்கியமாக வைதிகபுரியினரிடமிருந்து நம்மை நாஸ்திகரென்ற பட்டத்தைச் சுமக்கச் செய்தாரோ, அந்தக் கொள்கைக்கு முற்றிலும் புறம்பான தகுதத்மதுத்தள்ளாதவயதில் ஒரு இளமங்கையை மணஞ்செய்து கொண்டுவிட்டதாகக் கூறிவிட்டார். அந்த அனுதரவான ஏற்பாடு நம்மைத் திடுக்கிடவைத்தது, மனங் கலங்கச் செய்து விட்டது. அவரோ திடுக்கிட்டாரில்லை; கலங்கினாரில்லை; உழைப்பின் பயனாய் உருவாக்கப்பட்ட இயக்கத்திற்கு இத்தகைய இழிசொல் கூடாது எனும் காரணத்திற்காக அவர் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டபோது 'வேண்டாம் இந்த விபரீதப்போக்கு" எனக் கெஞ்சினோம், கதறினோம், பணிவன்போடு கடிதமூலமும் நேரிலும் வேண்டிக்கொண்டோம். கேட்டாரில்லை; எதை நமது இயக்கத்திற்கு இழிவு எனக் கருதினோமோ அதையே இயக்கத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

திராவிடமுன்னேற்றக்கழகப் பொதுக் குழுக் கூட்டம்

திருச்சியில் சிறப்புடன் நிகழ்ந்தேறியது

திருச்சி, ஜன. 1— திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 31-12-49 இரவு 9 மணிக்கு, திருச்சி கருணாநிதிபார்க்கில் நடைபெற்றது. பொதுக்குழுவைச் சேர்ந்த 80 உறுப்பினர்கள் கூட்டத்துக்கு வந்திருந்து சிறப்பித்தனர். கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தும், கூட்ட முடிவை அப்படியே ஏற்றுக்கொள்வதாக உறுதி தெரிவித்தும் 27 உறுப்பினர்கள் வரை செய்தியனுப்பியிருந்தனர்.

கூட்டத்தின் துவக்கத்தில் தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரையவர்கள், கடந்த மூன்று மாத காலமாக நடைபெற்ற கழக நடவடிக்கைகளை விவரித்துப்பேசினார்.

பின்னர் ஒவ்வொரு மாவட்டத்தினுடையவும் அமைப்பாளர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்தின் ஆக்க வேலையை எடுத்துரைத்தனர். பிறகு அமைப்புக்குழுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன், நிதிக்குழுச் செயலாளர் தோழர் காஞ்சி மணிமொழியார், சட்டதிட்டக் குழுச்செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன், பிரசாரச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன், ஆகியோர் தங்கள் தங்கள்குழு சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களையும், அறிக்கையையும் அளித்து விளக்கம் கூறினர்.

தலைமை நிலையத்தின் மூலம் இனி ஆற்றவிருக்கும் நடைமுறைகளைப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரை எடுத்துரைத்தார். குழு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகட்கும் சந்தேகங்கட்கும் அந்தந்தக் குழுச் செயலாளர் பதில் கூறினர்.

இறுதியாக, பிரசாரக் குழுச் செயலாளர் வந்திருந்தோரனைவர்க்கும் நன்றி கூறிய பின்னர், இரவு 12 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

மாலை மணி

சென்னை 2—1—50 திங்கட்கிழமை

சியாங் முகத்தில் கரி!

செஞ்சீனவை இந்தியா அங்கீகரித்து விட்டது. கம்யூனிஸ்டு மாசேதுங்கை சீனாவின் சவேவரசாகவும், அன்னாரின் நிர்வாக வதிக்கத்தின் கீழ் சீனப் பெரு நிலமுழுதும் ஒருமித்து வந்து விட்டதென்பதையும் இந்தியா ஏற்றுக்கொண்டு விட்டது. தேசீய சர்க்கார் சீனாவில் செல்லாக்காசாகி விட்டதென்பதையும், சியாங்கேஷேக்கின் 'தில்லு மல்லு'கள் இனியும் வெற்றி பயக்கப்போவதில்லையென்பதையும் உலகுக்குணர்த்திவிட்டது இந்தியா. சோவியத் ரஷ்யாவுக்குப் பின், கம்யூனிஸ்டு புதிய சீனாவை அங்கீகரிக்கும் முதனாடு இந்தியாவே யாகும். நேரு சர்க்காரின் இந்நெறியுடம் பட்ட நேர்மைச் செயலை உளமாரப் பாராட்டுகிறோம். காமன்வெல்த் நாட்டினத்திலுள்ள இதர நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக இருந்தது பற்றி மகிழ்கிறோம். இவ்விஷயத்தில் முதலாளித்வ அமெரிகக நாட்டின் பூனுமுனுப்புக்கும் முனிதலுக்கும அஞ்சாததேவையான முடிவை தீர்த்துடன் செய்தமைக்கு மெச்சுகிறோம்! இந்தியாவின் இவ்வேற்ற முடிவை ஏனைய காமன்வெல்த் நாடுகளும் அடுத்தடுத்து மேற்கொள்ளுமென நம்புகிறோம்.

கம்யூனிஸ்டுச் சர்க்காரிடமிருந்து அங்கீகாரம் கோரி கடந்த அக்டோபரில் வேண்டுகோள் வந்தது இந்தியாவுக்கு. இப்போது பீப்பிங்கில் அரசோச்சும் மாசேதுங் சர்க்காரின் நேரடி ஆட்சி யதிகாரத்தின் கீழ் சீன நிலப்பரப்பு முழுதும் வெகுவிரைவில் வந்துற்றுவிட்டபடியால், இந்தியாவும் தனது முடிவை இத்துணை விரைவில் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டது. இந்தியா செஞ் சீனவுக்கு அங்கீகாரம் நல்கிய ஒரு சில தினங்களில், புதுடெல்லியிலுள்ள சீன அரசுப் பிரதிநிதிக்குழு தேசீய சர்க்கார் திரும்ப அழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டது. மின்சார வேகத்தில் மாசேதுங் சர்க்கார் இவ்வண்ணம் வெற்றிபெற்றிருக்கிறது. வேறு எந்த நாட்டைக் காட்டிலும் இந்தியாவே, சீனவுடன் பலவகைத் துறைகளிலும் நிரம்பத் தொடர்புகள் கொண்டு நிற்பதென்ற வகையில். அங்கீகாரமளிப்பதில் முந்திக்கொண்டது குறிப்பிடத்தக்கதே யாகும். நேரு சர்க்காரின் இப்புத்திசாலித்தனமான போக்கை யாரும் வரவேற்றேத் தீருவர். மாசேதுங் சர்க்கார், சியாங் சர்க்காரைத் தலையெடுக்க முடியாதவாறு வீழ்த்திவிட்டதென்ற உண்மையடிப்படையின் மீது வழங்கப்பட்டிருக்கும் இவ்வங்கீகாரம் அனைத்துலக நாடுகளுடையவும் ஆமோதிப்பையும் பெறுதற்குரியதாகும்.

இந்தியா, செஞ் சீனவை அங்கீகரித்துவிட்ட செய்தியைக் கேள்வியுற்ற தேசீய சர்க்கார் அயல்நாட்டு மந்திரி டாக்டர் கே. சி. ஜார்ஜ்யே பார்மோஸாவிலிருந்து பதட்டத்துடன் பேசியுள்ளார். 'ஆசியாவிலும் பஸிபிக் பகுதியிலும் மேலும் கம்யூனிசம் பரவவே துணைசெய்யும் இந்திய சர்க்கார் இத்தகைய போக்கு' என்று. புது டில்லியில் தேசீய சீனாவின் அரசுப் பிரதிநிதி டாக்டர் சியாலூர் லோ தனது ஆந்திர அறிக்கையொன்றில் கூறுகிறார் "ஜனநாயகம், சுதந்தரம் இன்னபிற பொதுநலக் கோட்பாடுகளுக்கே எனது சர்க்காரும், மக்களும் போராடி வருகின்றனர்; கம்யூனிஸ்டு சர்க்காருக்கு அங்கீகாரம் அளித்துவிட்டதிலேற்படப் போகும் துரதிஷ்டவசமான விளைவுகளை வரலாறு காட்டத்தான் போகிறது" என்று. கீழே விழுந்தும். 'மீசையில் மண்படவில்லையே' யென்ற இவ்வரசியல் 'இன்சால்வென்ட்'களின் போக்கு எள்ளிநகையாடுதற்குரியனவே யன்றி, பொருட்படுத்தத்தக்கதல்ல. பொறுப்புள்ளோரின் மதிப்பீட்டுக்குரியனவல்லவென்பதை நடப்பறிந்தோர், நன்குணர்வர். கம்யூனிசம் பரவி விடுமோவென்று பதைக்கும் இவர்கள், 'ஜனநாயகம்-சுதந்தரம்' இன்ன பிறவற்றின் திருவுருவங்களாக நடித்துக்கொள்ளும் இவர்கள், சீனப் பெரு நிலத்தில் இத்துணை பெரித்த அளவில் கம்யூனிசம் ஊடுருவிப் பாய்ந்து, கிளைத்துத் தழைத்து நிற்கும் வரை என் செய்தனரென்று யாரும் கேட்பரே! தங்களது யதேச்சாதிகார, முதலாளித்துவ, பாரபட்ச போக்கால் கம்யூனிஸத்துக்கு வித்தூன்றிய இவர்கள், இன்று 'சுதந்தர தேவதையின் பிரதிபிம்பங்களாகப் பேசுவது பித்தலாட்டமென்பது தவிர, வேறு என்னவென்று கேட்கிறோம்.

காமன்வெல்த் குழுவைச் சேர்ந்த ஒரு நாடு சீனவுக்கு இங்ஙனம் அங்கீகாரம் நல்கிவிட்டபின்னர் மற்ற அக்குழு நாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக இம்முடிவைச் செய்தாக வேண்டியது இயற்கையாகும். இந்த நிலையில் ஐ. நாவில் தேசீய சீனாவின் பிரதிநிதியாக இருக்கும் சீனக் குழுவின் தன்மை என்ன? அத்தூதுக் குழு சீன மக்களின் உண்மையான பிரதிநிதியாக இருக்க முடியுமா? வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ரஷ்யா தெரிவித்து விட்டது போல, ஐ. நாவில் இடம்பெற்றுள்ள ஏனைய நாடுகளும் தேசீய சீனாவின் பிரதிநிதித்துவ மற்ற தன்மையைத் திறம்படத் தெளிவுபடுத்தி விடவேண்டியது தானே முறை! ஐ. நாவிலுள்ள இந்தியாவின் பிரதிநிதி தனது சர்க்காரின் மேற்படி முடிவையொட்டி, மக்களாதரவற்ற சியாங் சர்க்காரின் பிரதிநிதி டாக்டர் டிஸிபாங்கையும் அவரது குழுவையும் சபையினின்றும் வெளியேற்ற ரஷ்யாவோடு, ஒத்துழைப்பாரென நம்புகிறோம்.

ரஷ்யா-பிரிட்டன் ஐந்தாண்டு ஒப்பந்தம்

லண்டன், டிச. 31—

ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே 5 ஆண்டு வர்த்தக உடன்படிக்கை புது ஆண்டு ஆரம்பத்தில் கையெழுத்தாகும் என்று தெரிகிறது. பிரிட்டன் சில இயந்திரங்களை அனுப்பும் என்றும் ரஷ்யா மரம் உணவு மூலப் பொருள்கள் முதலியவைகளைச் செய்யும் என்று தெரிகிறது.

ஊமை செவிடுகளுக்குதவும் மின்சார கையுறை

நியூயார்க், டிச. 31—

ஊமை செவிடர்கள் உபயோகிப்பதற்காகவென்றே ஒரு விசேஷ மின்சார கையுறை ஒன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. [illegible] ஒலி [illegible] கையுறையில் [illegible] அணிந்திருப்பவர்களின் விரல்களில் [illegible] என்ன பேசப்படுகிறதென்பதை அறியலாம் என்றும் கூறப்படுகிறது.

சீர்காழி தாலுகாவில் எரிக்காற்றும், நிலக்கரியும் அகப்படக்கூடும்

சீர்காழி தாலுகா மங்கைமடம் [illegible] எல்லையிலுள்ள [illegible] இலுப்புச் கிராமத்தில் சமீபத்தில் 70 அடி ஆழத்திற்கு குழாய்க்கிணறு தோண்டப்பட்டு அதில் [illegible] அங்குல குழாய் போடப்பட்டன. அப்பொழுது அந்தக் குழாயின் வழியாக ஒருவித வெண்மை நிறக்காற்று ஓசையுடன் வெளிப்பட்டதாம். அக்காற்று நிறமற்றதாயும் [illegible] தன்மை வாய்ந்ததாக இருப்பதாகவும், ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அது மார்ஷ்கியாஸ் என்று சொல்லப்படும் ஒருவித எரிக்காற்று என்றும் தெரியவந்ததாம்.

செம்பதனிருப்பு கிராமத்திலும் இது போன்ற எரிக்காற்று அண்மையில் அகப்பட்டிருக்கிறது. அங்கு 100-குதிரை வேகமுள்ள எஞ்சின் 20-ஆண்டுகளுக்கு இயக்கச் செய்யும் அளவிற்கு எரிக்காற்று கிடைக்கக்கூடுமென்று டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

மங்கைமடம் பூமியின் கீழ் நிலக்கரியும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அறிவுக் கதிர்!

கருணையிலா ஆட்சி
கடுகி ஒழிக
அருணயந்த நன்மார்க்கர்
ஆள்க-தெருணயந்த
நல்லோர் நினைத்த
நலம் பெறுக
நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க
இசைந்து

—இராமலிங்க அடிகள்

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

3-1-50

அறுப்புக்கோட்டை: — சி. என். அண்ணாதுரை, காஞ்சி கல்யாணசுந்தரம், ஈ. வெ. அ. வள்ளிமுத்து.

பர்மாவைக் 'கடாட்சித்தருளவேண்டும்' காமன்வெல்த்!

உணவு தரும் நாட்டோடு உறவு பெருகவேண்டாமா?

கொழும்பு மாநாட்டில் நேரு எடுத்துரைப்பார்

லண்டன் ஜன. 1—

பர்மாவுடன் காமன்வெல்த் பொருளாதார உறவு அதிகரிக்க வேண்டும். என்ற தீர்மானத்தை இந்திய பிரதம மந்திரி பண்டித நேரு கொழும்பு காமன்வெல்த் மாநாட்டில் பிரேரிப்பார் என்று தெரிகிறது என்று ஸ்காட்ஸ்மென் பத்திரிகையின் லண்டன் நிருபர் கூறுகிறார்.

பர்மாவின் அரிசி இந்தியா முதலிய காமன்வெல்த் நாடுகளுக்கு அவசியம் வேண்டியிருப்பதால் அதன் கிளர்ச்சல் வாடைடை [illegible] நிலைகளுக்கு உதவியாக பர்மாவுக்கு காமன்வெல்த் நாடுகள் கடன் உதவி அளிக்க முன்வரவேண்டும் என்பதைப் பண்டித நேரு வற்புறுத்துவார் என்று ஒரு நிருபர் கூறுகிறார்.

சென்ற ஆண்டு பர்மாகேட்டதைய கடனை இந்தியா, இலங்கை பிரிட்டன் கொடுக்க முன்வந்தபோது வேண்டாம் என்றது நினைவிருக்கலாம்.

காமன்வெல்த் மாநாட்டிற்கு பர்மா அழைக்கப்பட்டது என்ற செய்திகள் மறுக்கப்பட்ட போதிலும் மாநாடு நடைபெறும் சமயத்தில் பர்மியப் பிரதமமந்திரி தாகின்நூ கொழும்புவுக்கு வந்து பெவினை சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

"நூ அணைகள்"

பம்பாய், டிச. 30—

இந்தியாவில் தீர்ப்பாசனத்துக்கும் ஜலமின்சார உற்பத்திக்கும் இப்பொழுதுள்ள நதி அணைத் திட்டங்களையும் இனிமேல் நிர்மாணிக்க உத்தேசிக்கன்ன திட்டங்களையும் விரிவாக சித்தரிக்கும் [illegible] என்ற ஒரு படம் டிசம்பர் 31ந் தேதி வெளிவருகிறது. [illegible] திட்டங்களை [illegible] நிறைவேற்றி வைக்க முடியுமென்பதை இப்படம் வெகு அழகாக எடுத்துக்காட்டுகிறது.

பல நூற்றாண்டுகளாக [illegible] செல்லொணாத் துயரை [illegible] அணைகள் [illegible] தேசிய பிரவாகத்தின் [illegible] விளைவுகளை [illegible]. இந்த [illegible] கால்வாய்கள் வெட்டி, வயல்களுக்கு பாசன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அத்துடன் நீரின் சக்தியைப் பயன்படுத்தி மிகக் குறைந்த செலவில் மின்சாரமும் உற்பத்திசெய்ய ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் படம், [illegible] ஜலமின்சார அமைப்புகளுடன் [illegible] வேலைசெய்து வரும் டாடா ஜலமின்சாரத் திட்டம், பைகாரா, பள்ளிவாசல், பாபநாசம் ஆகிய திட்டங்களைச் சித்திரித்துக் காண்பித்துவிட்டு, இனிமேல் நிர்மாணிக்கப்படவிருக்கும் [illegible] திட்டம், [illegible] திட்டம், [illegible] அச்சம் [illegible] எடுத்துக் காட்டுகிறது.

மீன் அணை!

நியூயார்க், ஜன. 1—

[illegible] தண்ணீர் [illegible] குழாயில் [illegible] தண்ணீர் வரவில்லை [illegible] புகார்கள் சமீபத்தில் [illegible]. பின்னர் ஆராய்ந்ததில் தண்ணீர் சப்ளை 'டாங்கி'யில் ஏராள மீன்கள் தண்ணீர் போகும் வழியை அடைத்துக்கொண்டதே காரணம் என்று தெரிய வந்தது. [illegible] மீன்களை பிடித்து [illegible] பின் [illegible] தண்ணீர் [illegible] வர ஆரம்பித்ததாம். —ஏ. பி.

மாசேதுங்கின் வெற்றியாரவார எதிரொலி

:(0):

திபேத்துடன்பிரிட்டனின் அரசியலுறவு

லண்டன், ஜன. 1—

திபேத் சர்க்காருடன் பிரிட்டிஷ் சர்க்கார் உறவு அதிகாரியான ரிச்சர்ட்ஸின் விமான மூலம் லாஸாவுக்குப் புறப்பட்டிருக்கிறார். திபேத்தின் நெருக்கடியான நிலைமை குறித்து பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்துபேச லண்டன் வந்துகொண்டிருக்கும் யூதெக்ட்ஸாஸ என்பவரை ரிச்சர்ட்ஸன் வழியில் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

மாசேதுங் திபேத்தை விடுவித்து அங்கு ஒரு பொம்மை சர்க்காரை அமைக்கப்போவதாக வெளியிட்டிருப்பதை யொட்டி பிரிட்டிஷ் திபேத் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. திபேத்துடன் முழுஸ்தானிக உறவை ஏற்படுத்திக் கொள்ள பிரிட்டன் விரும்புகிறதென்றும், திபேத் கேட்டுக்கொள்ளாதிருக்கையிலேயே பிரிட்டன் இதற்கு தயாராக இருக்கிறது என்றும் பலத்த வதந்திகள் இருந்து வருகின்றன.

ஜனவரி 26-க்குப்பின் 'பஞ்சாயத்து போர்டு' ஆகும் சென்னை மாகாணம்!

மாகாண அரசியலுரிமையை மத்திய ஆட்சிக்கு அடகுவைப்பதா?

—(0)—

மூடநம்பிக்கை-யதேச்சாதிகார சூழ்நிலையில் முன்னேற்றக் கழகத்தினரின் பொறுப்பு

திருச்சி மாநாட்டில் தோழர் பழனிச்சாமி துவக்கவுரை

1-1-1950 அன்று திருச்சி கருணாநிதி பார்க் வேலாயுதம் பந்தலில் நடைபெற்ற திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாட்டைத் துவக்கி வைக்க தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமியவர்களின் சொற்பொழிவு வருமாறு;—

பேரன்பு மிக்க தோழர்களே! தாய்மார்களே! அறிஞர் அண்ணா அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியத்திற்கான காரணங்களையும் சூழ்நிலையையும் தாங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

கடந்த மூன்று மாதங்களாய் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை நாடெங்கும் தோற்றுவித்தல், உறுப்பினர்கள் சேர்த்தல், கழகக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தல், நிதி சேர்த்தல் ஆகிய காரியங்களில் எல்லாத் தோழர்களும் சலியாது பணியாற்றி வருவதையுங் கண்டு உள்ளபடியே மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் மட்டுமன்றி தன்மானத் திராவிடத் தோழர்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படுகிறார்கள்-பாராட்டு கூறுகின்றனர்.

கொள்கை பிரியாது என்றும்!

ஆனால், இப்பூரிப்பும், பெருமையும் எந்த அளவுக்கு நாம் அடைகிறோமோ, அந்த அளவுக்கு நமது பொறுப்பும் கடமையும் பெருகி வருகிறது; என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இதுவரை நாம் திராவிடர் கழகத்தின் சார்பில் கணக்கற்ற தாலுகா மாவட்ட மாகாண மாநாடுகளை நடத்தியிருக்கிறோம். அவைகளில் நம்மிடையேயிருந்து வழி காட்டிவந்தத் தலைவர் பெரியார் அவர்கள் இம்மாநாட்டிலே இல்லை; நம்மோடு இல்லை.

இச்சம்பவம் நமக்கு இன்பத்தை அளிப்பதல்ல. மாறு வேதனையையே தருவதாகும். நம்மையும் நமது தலைவரையும் பிரித்து இயக்க வளர்ச்சியிலே, முட்டுக்கட்டை போட்டவர்கள் யார் யார் என்பதை நாடு அறிந்திருக்கிறது. இது இடைக்கால முட்டுக்கட்டையேயன்றி வேறில்லை.

ஆனால், நண்பர்களே ஒன்று மட்டும் நான் கூற விரும்புகிறேன். நம்மையும் நமது தலைவரையும் பிரித்து வைப்பதில் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டதாகக் கருதலாமேயன்றி, பெரியார் கூறிவந்த, பணியாற்றி வந்த தீவிரக் கொள்கைகளை மட்டும் நம்மை விட்டுப் பிரிக்கச் சிசியும்படி செய்ய எவராலுமே முடியாது.

பணி தொடங்கிவிட்டோம்!

இன்றைக்கில்லாவிட்டாலும், என்றேனும் ஒரு நாள் நாடு உண்மையை உணரத்தான் போகிறது. இயக்கத்துக்கு நாசம் விளைத்தவர்கள் யார் என்பதைத் திராவிட சமுதாயம் அறியத்

தான் போகிறது என, பெரியார் அவர்களை உணரத்தான் போகிறார்.

தோழர்களே! இவ்வித நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்ட சமயத்தில் நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டுத்துவித்த சமயத்தில் திராவிடத்தின் வருங்கால வாழ்வுக்கு நல்வழி வகுத்துக்கொடுத்து, நம்மை தொடர்ந்து பணியாற்றும்படி செய்த நமது அண்ணா அவர்களுக்குத் திராவிட மக்களின் நன்றி என்றென்றும் உரித்தாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை ஆற்றி வரும் தொண்டிற்கு ஆதரவாக நம்மிடம் ஏதேனும் மூல

தனமோ, செல்வச் சீமான்களின் பக்கபலமோ ஒரு சிறிதும் கிடையாது. முக்கிய வசதியில்லாத ஒரு சிறு தினசரியான "மாலை மணி"யும் சில வார வெளியீடுகளும் மட்டுந்தான் நமக்குள்ள ஆயுதங்கள். தலைமை நிலையத்தின் அன்றாட வேலைகளுக்கே நமக்குப் போதுமான வசதியில்லாமலே இருந்து வந்துள்ளது. சென்ற வாரத்தில்தான் தூத்துக்குடி, விருதை, புதுக்கோட்டை ஆகிய ஊர்களின் கிளைக் கழகத்தினரின் முயற்சியால் நாடகம் நடத்தி ஓரளவுக்கு நிதி திரட்டப்பட்டுள்ளது.

உரிமை பறிக்கப்படுகிறது

நிதியைப் பற்றி நாம் கலங்கவில்லை. உங்களுடைய உண்மையான உழைப்பும், கொள்கையில் கொண்ட உறுதியுமே, நிதியைவிட முக்கியமானவையாகும். கொள்கையில் உறுதியில்லாது நிதியை வைத்துக் கொண்டு மட்டும் என்ன செய்ய முடியும்? என்ன செய்யப்பட்டது?

மதிப்பிற்குரிய நண்பர்களே! நம் நாட்டின் இன்றைய அரசியல் நிலையும், ஆட்சியின் போக்கும் தாங்க முடியாத எதேச்சதிகாரத்தைச் சுமந்து நிற்க முற்பட்டுள்ளது.

வெள்ளையர் சுரண்டல் ஒழிந்ததேயன்றி, வடநாட்டு ஏகாதிபத்திய தேசியச் சுரண்டல் நின்றபாடில்லை. நம் நாட்டின் அரசியல் உரிமைகள் அடியோடு பறிக்கப்பட்டுவிட்டன.

இம்மாதம் 26-ந் தேதி முதல் அமுலுக்கு வரப் போகும் புதிய அரசியல்திட்டம், நமது மாகாணங்களை சாதாரணப் பஞ்சாயத்து போர்டைப் போன்ற நிலைக்குக்கொண்டுவருகின்றது.

வெள்ளையர் ஆதிக்கத்தில், இரட்டையாட்சிமுறைக்கே ஒத்துழையாமை செய்த தேசியத் தோழர்கள், வடநாட்டு ஏகாதிபத்திய இன்றையஆட்சியிலேமட்டுமுள்ள சிற்சில உரிமைகளையும் இழந்துவிட்டு, ஆண்டான் அடிமை என்ற முறையில் நம் மாகாணத்தின் அரசியல் உரிமையை அடகுவைக்கும் புதிய அரசியல் திட்டத்தை வானமளாவிப் புகழ்ந்து நிறைவேற்றுவது வெட்கப்பட வேண்டியதாகும்.

நம் திராவிடம், தனி அரசாகி உழைப்பவர்க்கே உரிமையுள்ளதான ஆட்சியை நிறுவ வேண்டுமென்ற நம் இலட்சியத்திற்கு, மேலும் மேலும் வடநாட்டாதிக்கம் முட்டுக்கட்டை போடுவதாலோ, உளுத்துப்போன வெள்ளையர் ஆதிக்கச் சட்டங்களுக்கு புது மெருகு கொடுப்பதாலோ திராவிடரின் -தென்னாட்டவர்களின் உரிமையைத் தடுத்து அடிமையாக்கிவிடலாமென்று நினைத்துள்ள வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கும், அதை தாங்கி நிற்பவர்களுக்கும் இம்மாநாட்டின்மூலம் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

பெரிய பெரிய ஏகாதிபத்தியங்களெல்லாம் சரிந்து விழுந்து, தவிடுபொடியாகி வரும் காலம் இது. இந்துஸ்தானத்துக்குப் பக்கத்திலேயே இந் நிலையைக் காணும் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கு அரசியல் தெளிவு உண்டாகாததற்கு வருந்தத்தான் வேண்டும்.

அடுத்தபடியாக, வடநாட்டு இந்தி மொழி, தென்னாட்டில் ஆதிக்கம்செலுத்த முற்பட்டுள்ளதைபெருதிப்பிடவேண்டும். இதுவும் வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதைபோன்று ஆகிவருகிறது

தடை தாண்டவம் புரிகிறது

பொதுவாக, இன்று பேச்சுரிமை, எழுத்துரிமை, ஏன் மனித உரிமையே மறுக்கப்படுகிறது! நமது இயக்க நூல்களுக்கும், நாடகங்களுக்குமே தடை! இவ்விதக் காட்டுமிராண்டி ஆட்சிக்குப் பெயர்தான் சுயராஜ்ய ஆட்சியாம்! உண்மையான தேசியவாதிகள் உள்ளபடியே இக் கூற்றை மறுக்கத் துணியமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.

பாடுபட்டுழைக்கும் பாட்டாளிமக்களின் நிலையோ சொல்ல வேண்டுவதில்லை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயில் ஆண்டி என்பதுபோல, விவசாயிகள், நெசவாளர்கள் முதல் எல்லாத் தொழிலாளர்க்கும் தொல்லை. தொழில் ஸ்தாபனங்களுக்குக் கேள்வி கேட்பாரற்ற முறையில் கலைக்கப்படுகின்றன, தடை தாண்டவமாடுகிறது.

நிற்க, இந்நிலையில், பழமையின் [illegible] பார்ப்பனீயப் [illegible] மீண்டும் பின் தங்க [illegible] வேரூன்றித்தலைதூக்க [illegible] கிறது!

கடமைகள் காத்து நிற்கின்றன

தோழர்களே, திராவிடஇயக்கத்துக்கு மட்டுமன்றி பொதுவாக மக்களின் அறிவு வளர்ச்சிக்கான துறையில் பணியாற்றிவரும், அண்ணா அவர்கள், பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்ட நூல்களை எழுதித்தந்து நாட்டில் வேரூன்றி வளர்ந்திருந்த அறியாமையை ஒழித்து வருகிறார்.

கட்சி வேற்றுமைகளை மறந்து, முற்போக்கு நோக்கங் கொண்ட அனைவராலும் அண்ணாவின் இத்தொண்டு வரவேற்கப்படுகிறது. ஆனால் இன்றைய ஆட்சியாளருக்கு மட்டும் அத் தெளிவு ஏற்படவில்லை. அண்ணா எழுதிய அறிவு நூல்களுக்குத் தடை, வழக்கு, போன்ற தொல்லைகளை ஆட்சியிடம் விளைவித்து வருகின்றனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டு மக்கள் அனைவருக்கும்உரித்தானவராகிவிட்டார். அவருக்கு அறிவும், தியாக உணர்ச்சியும், லட்சிய உறுதியும்பக்கபலமாகஅமைந்துள்ளன. எனவே அறியாமையையும், எதேச்சாதிகாரத்தையுங் கொண்ட ஆட்சியினர் இனியாவது அறிவு வளர்ச்சியிடம்மோதி, சிதைவுற வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

ஆகவே, நான் முதலில் எடுத்துக் காட்டியதுபோல நமது பொறுப்புகளும், கடமைகளும் வளர்ந்துவிட்டன. என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

முதலிடம் திருச்சிக்கு

தோழர்களே! இவ்விதப் பெருந்தொல்லைகளை எதிர்த்து, அதிலிருந்து நமது நாட்டை மீட்க வேண்டுமானால், நம்மிடையே மிகக் கட்டுப்பாடும், தியாக உணர்ச்சியும், ஜனநாயக முறையில் இயக்கத்தை வளர்க்கும் ஆற்றலும், ஆர்வமும், உறுதியும், நிலைத்திருக்க வேண்டும்

திராவிடம் தனித்து நின்று, ஆட்சிபுரிந்து மற்ற மாகாணங்களைருக்கும் வடநாட்டுப் பலத்தை அழிக்கும் வழிவகையை எடுத்துக்காட்டும் முறையில், தொடர்ந்து பணியாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சிறிதும் பின்வாங்காது என்பதை நம்மை அடக்கப் பார்க்கும் அரசியலாருக்கு எடுத்துக் காட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகச் சரித்திரத்தில் முதன் முதலான இடம்பெற்றது திருச்சி மாநாடு. நமது தலைமைக் கழகம் நிறுவப்பட்டு, அமைப்பு முறைபடன் கிளைக்கழகங்கள் ஆங்காங்கு தோற்றுவிக்கப்பட்டு, கூட்டப்படும் இம் முதல் மாநாட்டைத் துவக்கி வைக்கும் வாய்ப்பினை அளித்த வரவேற்புக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி நமதே!

அதே சமயம் எனக்கு அளிக்கப்பட்ட இப்பொறுப்பானை கொண்டுக்கேற்ப, தொடர்ந்து திராவிடத்தின் விடுதலைக்குப் பணியாற்றுவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

நமது கொள்கையை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது! பழமை—பாசிஸம் பார்ப்பனியம்—ஆக மூன்று சக்திகளும் ஒன்று சேர்ந்து நமக்குத் தொல்லைவிளைவித்தாலுங்கூட இறுதியில் வெற்றி நமதே என்பது உறுதி.

எனவே, திராவிட சமுதாயத்தோழர்களும், தாய்மார்களும், குடி பாகத் தொழிலாளர்களும், மாணவர்களும் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு நற்பேராதரவுதரவேண்டி இம்மாநாட்டை உங்கள் சார்பாகத் துவக்கி வைக்கிறேன்.

வாழ்க திராவிடம்!
வளர்க திராவிட முன்னேற்றக் கழகம்.

சர்க்கரை குறைகூறியவர்க்கு 'சஸ்பெண்ட்'

பிராக், டிச. 31— [illegible] சர்க்கரைக் குறைகூறியதற்காக [illegible] 10 [illegible] சஸ்பெண்ட் செய்திருக்கிறார்.

இந்த உறுப்பினர் சபையை விட்டு அகலாதிருக்கவே [illegible] காவலாளர்களைக் கொண்டு இவர் வெளியேற்றப்பட்டார்.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

15-1-50 ஞாயிறு காலே 8-மணிக்கு

சென்னை மிருகக் கண்காட்சி சாலேக்குப் பின்புறம் அமைந்துள்ள

"அழகிரி பந்தலில்" நடைபெறும்

தலைவர்:- **சேலம் ஏ. சித்தையன்**

துவக்குபவர்:- மதுரை எஸ். முத்து

சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்

நாடகம் நடைபெறும்.

வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் சாதனை

நவம்பரில் 18 ஆயிரம் பேர் வேலையிலமர்த்தப்பட்டனர்

புதுடில்லி, டிச. 28— வேலைக்காக, வேலை தேடித்தரும் நிலையங்களில் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையும் வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 1949 நவம்பரில் அதிகரித்திருப்பதாக வேலை தேடித்தரும் நிலையங்களின் [illegible] கள்ளிவிவரங்களி[illegible] [illegible] மாதங்களில் வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது இந்த மாதத்தில்தான்; இந்த மாதத்தில் மொத்தம் 18510 பேருக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கை அக்டோபர் மாத எண்ணிக்கையைவிட 12 சதவிகிதம் அதிகமாகும். வேலைக்காக நவம்பரில் பதிவுசெய்துகொண்டவர்கள் எண்ணிக்கை 77, 317 ஆகும். முந்திய மாதத்தில் 71, 464 பேர்களே பதிவு செய்துகொண்டனர். நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் [illegible] தகவல்களிலிருந்து வேலை வசதி அதிகமாக அபிவிருத்தி அடையவில்லையென்றாலும், சற்று நிலைமை மோசமாகக் காணப்பட்டு வந்த சில குறைவு இப்பொழுது தடுக்கப்பட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. வேலை தேடித்தரும் நிலையங்களின் இடம் பெயர்ந்தோர் பிரிவுகள் இந்த மாதத்தில் தீவிரமாக வேலை செய்தவர்தன [illegible] பிரிவுகள் மிகப் பிரமாதமாக வெற்றி பெற்றிருப்பதாகவும் தெரியவருகிறது. உதாரணமாக ஷோலாப்பூர் நிலையத்தில் இடம் பெயர்ந்தோர் பிரிவு 1949 நவம்பரில் மொத்தம் 145 பேரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறது, 136 பேருக்கு வேலையும் தேடிக்கொடுத்திருக்கிறது. மீரட் பிரிவு, 229 பேரைப் பதிவு செய்திருக்கிறது 152 பேருக்கு வேலை தேடிக் கொடுத்திருக்கிறது; ராய்பூர் நிலையத்தைச் சேர்ந்த பிரிவு 87 பேருக்கு வேலை தேடிக்கொடுத்திருக்கிறது.

வேலை தேடித்தரும் நிலையங்கள் பொதுமக்களுக்கு அளித்து வரும் சேவையின் தரத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, நிலையங்களை அன்றாடப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் உதவி புரியும் பொருட்

பாகிஸ்தானில் பசுக்கொலை தடை செய்யப்படும்!

பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் [illegible] பகுதியில் குறிப்பாக, [illegible] பசுப் பாதுகாப்பு [illegible] பசுக் கொலையை சட்ட மூலம் தடைசெய்ய திட்டமிடப்பட்டிருப்பதாக உணவு மந்திரி ஜனாப் அப்துல் சத்தார் பீர்ஜாதா [illegible] சட்டசபையில் [illegible] 28—ல் குறிப்பிட்டார்.

மாகாண சர்க்கார் இவ் விஷயத்தை ஏற்கனவே ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பயனுள்ள ஆடுமாடுகளைப் பாதுகாத்து, பஞ்சத்தைப்போக்குவதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

பொது மக்கள் சேவைக்குப் பரிசு

கொழும்பு, டிச. 30— பொதுமக்கள் சேவை புரிந்துவிட்ட இலங்கை வாசிகளில் [illegible] 24 பேர்களுக்கு இலங்கை சர்க்கார் பிரஜா உரிமை அளித்திருக்கிறது. [illegible] ஆண்டுதோறும் இம்மாதிரி பொதுமக்கள் சேவையில் ஈடுபட்ட 25 பேர்களுக்கும் பிரஜா உரிமை அளிப்பதென்று இலங்கை சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம். இந்த பிரஜாவுரிமை கோருபவர்கள் குடியிருக்கவேண்டும் [illegible] எல்லாம் [illegible] தேவையில்லையாம். [illegible] சமூகசேவை [illegible] [illegible] வேண்டும் [illegible] பொதுமக்கள் சேவை செய்த இந்தச் சாதனை [illegible]

...கள், பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் கொண்ட மத்திய மேற்பார்வை ஸ்தாபனமொன்று டில்லியில் ஏற்படுத்தப்பட்டு, இம்மாதம் வேலை தொடங்கியிருக்கிறது. அதிகப்படியான செலவு ஏற்படாத வகையில் இந்த ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

மூட நம்பிக்கை அங்கும் அமோகம்!

ஜமெய்க்காவில் சென்ற வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வயது வந்தோருக்கு வாக்குரிமையின் பேரில் நடைபெற்றது.

ஜமெய்க்காவின் வயது வந்தோர் மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். ஆகவே, இவர்கள் ஓட்டளிப்பதில் [illegible] ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒவ்வொரு சின்னம் கொடுக்கப்பட்டிருந்தது. உதாரணமாக ஒரு அபேட்சகருக்கு மீன் சின்னம் கொடுக்கப்பட்டிருந்தது. இதே மாதிரி நட்சத்திரம், பறவை முதலிய உருவங்கள் ஒவ்வொரு அபேட்சகருக்கும் அளிக்கப்பட்டிருந்தன.

ஜமெய்க்கா மக்களிடையே கல்வியறிவு இல்லாமையால், மூட நம்பிக்கை இருந்து வருகிறது. ஒரு அபேட்சகர் அதிர்ஷ்டமான 'நட்சத்திரம்' தன் சின்னமாக வரவேண்டும் என்பதற்காக தன் பெயரையே நட்சத்திரம் [illegible] என்று வைத்துக் கொண்டார். அந்தச் சின்னம் கிடைக்குமோ [illegible] அந்தப் பெயரை வைத்துக்கொண்டாராம். பொதுமக்கள் [illegible] ஒரு சின்னம் தனக்கு கிடைத்துவிட்டதே என்பதற்காக ஒரு அபேட்சகர் தன் அபேட்சையையே வாபஸ் பெற்றுவிட்டாராம்.

மேற்கிந்திய தீவுகளிலுள்ள மக்கள் தொகையில் 210000 இந்தியர்கள். ஜமெய்க்காவில் மட்டும் 18000 இந்தியர்கள் இருக்கிறார்கள். மேற்கிந்திய தீவு கரும்பு தோட்டங்களில் வேலை செய்யவே அவர்கள் அங்கு குடியேறியவர்கள்.

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காருக்கு இந்தியா அங்கீகாரம்

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரை இந்தியா அங்கீகரித்துவிட்டதென்று உறுதியாகத் தெரிவிக்கப்பட்டதென்று லண்டன் உத்தியோக வட்டாரங்களில் கூறிக்கொள்ளப்படுகிறது. இந்திய சர்க்காரின் மேற்கண்ட முடிவு, பிரிட்டிஷ் சர்க்காருக்கு அறிவிக்கப் பெற்றுவிட்டதாம். சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காருடன் அரசியல் தொடர்புகொள் என்போரும் முதன் காமன் வெல்த் நாடு இந்தியாவேயாகும்.

பயன் கருதாது பரிசளிக்கிருர்களாம்!

தியாகிகளுக்கு நில மான்யம் அளிக்கும் மகத்துவம் பற்றி காளா வெங்கட்ராவ் பீத்தல்;

"தியாகிகள் தங்கள் தியாகிகளுக்கு பிரதிப் பிரயோஜனம் வேண்டுமென்று ஒருபோதும் கேட்கவில்லை. காங்கிரஸ் அடித்த காட்டில் ராமராஜ்யத்தைத் தோற்றுவிக்க அவர்களுக்கு ஊக்களிக்க சர்க்கார் தாமாகவே முன் வந்தது. மகாத்மாஜியின் அழைப்பு வந்ததும் தங்களுடைய வீடு, வாசல், மனைவி மக்களெல்லாம் விட்டுவிடுதலைப் போரில் குதித்தவர்கள் பிரதி பிரயோஜனத்தைக் கருதி அப்படிச் செய்யவில்லை"

என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் தோழர் காளா வெங்கட்ராவ் அண்மையில் நடைபெற்ற நீயின் மாநாட்டில் பேசியிருக்கிறார். இவை "தியாகிகளுக்கு நிலமான்யம் அளிப்பதை எதிர்ப்பவர்களுக்கு காளாவின் பதில்" என்று பெரிய எழுத்துக்களில் [illegible] தேசிய ஏடுகள் [illegible] நிலமான்யம் அளிக்கப்படவேண்டும் என்ற [illegible] செய்திவிட்டதாக எண்ணி தோழர் காளாவும் களிப்புற்றிருக்கலாம் [illegible] இந்த மான்யம் அளிக்கும் திட்டம் [illegible] [illegible] [illegible] ஆராய்ந்து [illegible] [illegible] தெரியவரும்.

மகாத்மாஜியின் அழைப்பு [illegible] வீடு, வாசல், மக்கள் [illegible] [illegible] குதித்தவர்கள்" என்று காளா குறிப்பிடுகிறாரே, அப்படிப்பட்ட உண்மைத் தியாகிகள் எத்தனைபேர் உள்ளனர்? இந்த மான்யத் திட்டத்தின் அடைக்கலக் [illegible]? உண்மையான தியாகிகள் பலர் இருக்குமிடம் தெரியாமல் [illegible] [illegible] உழன்று கொண்டிருக்கின்றனர். உண்மைத் தொண்டர்கள் [illegible] தியாகிகளின் [illegible] [illegible] [illegible]. 'தியாகி' என்ற அரசியல் [illegible] [illegible] வேண்டுமென்றும் அதற்காக [illegible] [illegible] வேண்டுமென்றும் [illegible] [illegible] [illegible] வேண்டும் [illegible] [illegible] உறுப்பினர்களாக [illegible] வேண்டும்; அதுவுமில்லாவிட்டால் சட்டசபை உறுப்பினர்களுக்கோ, காங்கிரஸ் மந்திரிகளுக்கோ நெருங்கிய நண்பர்களாக இருந்தாக வேண்டும். இந்த பட்டியலில் அடங்காத [illegible] அவர்கள் எவ்வளவு தான் தியாகம் செய்திருந்தபோதிலும் பயனில்லை. அப்படியே [illegible] மான்யம் கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும் அந்தத் தியாகிகளின் வாழ்க்கையைப் போலவே [illegible] [illegible] நிலந்தான் கிடைக்கும். [illegible] தான் அவர்களுக்குப் பரிசு! அதுவும் எளிதில் கிடைத்துவிடுமா? கிடைக்காது; தியாகிகள் [illegible] பரீட்சை செய்து [illegible] பிறகே அந்தப் பரிசும் அளிக்கப் [illegible] [illegible] [illegible] உண்மையான [illegible] [illegible] [illegible] [illegible] மகாசபைகளுக்கு [illegible] செலுத்துபவர்களாக [illegible] இருக்க வேண்டும். [illegible] [illegible] இறுதி [illegible] ருசுப்பிக்க [illegible] [illegible]

உண்மையான தியாகிகள் [illegible] [illegible] [illegible] வேண்டும் என்ற [illegible] [illegible] உண்மையான திட்டம் [illegible] காங்கிரஸ் [illegible] [illegible] [illegible] இல்லை. [illegible] [illegible] [illegible]. அவர்களைக் கேட்டால் தெரியும் இந்த மான்யமளிக்கும் ஜாலவித்தை [illegible].

ஆகவே, இம்மான்யமெல்லாம் தியாகிகளுக்காக கண்ணீர் வடிக்கும் [illegible] ஒரு [illegible] [illegible] [illegible] [illegible] என்று [illegible] [illegible] காங்கிரஸ் தலைவர்கள். [illegible] ஒரு வழியில் உண்மையே. [illegible] [illegible] [illegible] இந்த மான்யம் அளிக்கப்படுகிறது. தியாகிகளைப் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மாகாணம் [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] அதிர்ந்து கொள்ளலாம்.

இந்தியா—பாகிஸ்தான் வர்த்தகத் தகராறு

புதுடெல்லி, ஜன. 1— "இந்தியா— பாகிஸ்தான் இவைகளுக்கிடையே வர்த்தக விஷயமாக தகராறு இருப்பது இரு நாடுகளுக்கும் கேடு விளைவிப்பதாகும் இவ்விஷயம் சமரசமாகத் தீர்க்கப்பட வேண்டியது மிக மிக அவசியம்" என்று இந்திய—பாகிஸ்தான் [illegible] சங்கத்தின் தலைவர் தோழர் ஆசார்யா [illegible] ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

அவர் கூறுவதாவது:— இரு நாடுகளின் பொருளாதாரம் ஒன்றுடன் ஒன்று [illegible] பந்தப்பட்டதாகும். இந்த நெருக்கடி இருபக்கமும் கூர் உள்ள வாள் போன்றதாகும். இந்திய பாகிஸ்தான் வர்த்தகத்தினால் எவ்வளவோ [illegible] [illegible]. தகராறு நீடிப்பது இவர்கள் வாயில் மண்ணைப் போடுவதாகும்.

இருநாடுகளும் பதிலுக்குப் பதில் செய்து கொண்டிராமல் பேசித்தீர்க்க முடியாத விஷயங்களை மத்தியஸ்தத்திற்கு விட்டு அதன் முடிவுப்படி நடந்து கொள்ளவேண்டும்.

தென் கிழக்கு ஆசியாவை 'ரட்சிக்க' அமெரிக்கத் திட்டம்

கம்யூனிஸ்டு ஆதிக்கத்துக்கு தடை போட முஸ்தீபு

பார்மோஸா பற்றி 'ஒயிட் ஹால்' மௌனம்

லண்டன், ஜன 1—

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் பரவ [illegible] அமெரிக்க ஐக்கிய ஸ்டேட்ஸ் ஒரு தீவிரமான திட்டத்தை தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதை அமுல் நடத்தும் விஷயமாக பலத்த அபிப்பிராய பேதங்கள் இருந்துவருகின்றன.

முக்கியமாக பார்மோஸா விஷயத்தில் அமெரிக்கா உதவி செய்ய முன்வரவேண்டுமா, ஒதுங்கி நிற்கவேண்டுமா என்ற விஷயம் அமெரிக்க உபதர அதிகாரிகளிடையேயும் [illegible] தலைவர்களிடையேயும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

[illegible] ஆர்தரும் அவரைச் சேர்ந்தவர்களும் பார்மோஸா விஷயத்தில் யு. எஸ். தலையிடாவிடில் கம்யூனிஸ்டுகளை ஒழிக்கமுடியாது என்று கருதுகிறார்கள். ஆனால் யு. எஸ். ராஜாங்க இலாகா இனி [illegible] சீனாவுக்கு எவ்வித உதவியும் செய்வதில் பயனில்லை என்றும், பார்மோஸாவில் தலையிட்டாலும் இனிமேல் எதுவும் செய்வதற்கில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டு சீனா இப்போது பாயமாட்டதென்றும், அந்நாடுகளில் ஐந்தாம் படை வேலைகளை நடத்துவதுடன் நிறுத்திக்கொள்ளும் என்றும் லண்டன் டைம்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

ஒயிட்ஹால் மௌனம்

கீழ்த்திசையில் அமெரிக்கா கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கை விஷயமாக ஒயிட்ஹால் எதுவும் கூறாமல் மௌனம் சாதிக்கிறது. சீன விஷயமாக யு. எஸ். என்ன செய்யப்போகிறது என்ற விஷயமாக எவ்விதத் தகவலும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இதுவரை கிடைக்கவில்லை.

மாசேதுங் சர்க்காரை அங்கீகரிக்கப்பின் பிரிட்டன் பார்மோஸா விஷயமாக எதுவும் செய்யாது என்று மஞ்செஸ்டர் கார்டியன் கூறுகிறது.

பார்மோஸா விஷயமாக யு. எஸ். என்ன செய்யப்போகிறது என்பதில் தலைவர் ட்ரூமன் [illegible] முடிவைப் பொறுத்த விஷயமாகும். அநேகமாக இம்மையை மேற்கில் [illegible] பலத்த ராணுவ தூதுகோஷ்டியை பார்மோஸாவுக்கு அனுப்பிவைக்கக்கூடும்.

நிர்வாக ஊழலுக்காக மந்திரிகள் விசாரிக்கப்படுவர்

கெய்ரோ, டிச. 31—

நிர்வாக ஊழலுக்காக மந்திரிகளை விசாரணை செய்வது விஷயமாகச் சட்டம் இயற்றுவதை [illegible] மந்திரிசபை அங்கீகரித்துவிட்டது என்று, எகிப்து பிரதமர் தோழர் ஸிர்ரிபாஷா கூறினார்.

ரஷ்யா போக்குபற்றி துருக்கியின் கவலை!

டமாஸ்கஸ், டிச. 31—

துருக்கி, ஈரான், இராக் [illegible] [illegible] செய்யும் [illegible] [illegible] துருக்கி [illegible] செய்திருக்கிறது.

[illegible] துருக்கிக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறதென்று; இவ்விஷயமாக உடனே கூட்டு யோசனை செய்யவேண்டும் என்று [illegible] துருக்கி அழைக்கும் [illegible] கூறப்படுகிறது.

[illegible]

சிரியா [illegible] தலைவர் [illegible] குவோப் [illegible] இது விஷயமாக [illegible] சம்பந்தமில்லை என்று சிரியாவிலுள்ள [illegible] ரஷ்யாவின் ஆசைவார்த்தைகளில் மயங்கி விடாதென்றும் கூறினார்.

பிரிட்டன் அமெரிக்கா மீது ரஷ்யா விஷம்கொடுக்கிறது [illegible] ஐந்தாண்டு திட்டம் [illegible] 12 வீரர்கள் ஐப்பானிய போர்க் குற்றவாளிகளின் [illegible] [illegible] ரஷ்யா செய்திகள் கூறுகின்றன.

இந்தோ-சீனாவை கம்யூனிஸ்டுகள் தாக்கினால்.... ?

இந்தோ-சீனா எல்லைப்புறத்திலிருந்து சீன கம்யூனிஸ்டுகள் தாக்கினால், பிரான்ஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம்; அத்துடன், உடனடியாக [illegible] 'அட்லீ' [illegible] [illegible] இந்தோ-சீனாவில் [illegible] [illegible] டிச 28-ந் தேதி [illegible] [illegible] குறிப்பிட்டுள்ளார்.

6-கோடி ஏகராவில் நெல் சாகுபடி

இந்தியாவில் 1949-50-ல் செய்யப்பட்ட சாகுபடி பற்றி விவசாய மந்திரி சாகியாலயத்தைச் சேர்ந்த பொருளாதார புள்ளிவிவர டைரெக்டரேட் [illegible] முதல் மதிப்பீட்டின் பிரகாரம், மொத்தம் 6 15 63 000 ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. 1948-49ல் மொத்தம் 5 88 27,000 ஏகரா நிலத்திலேயே நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு முந்திய ஆண்டைவிட 4 7 சதவீதம் அதிகமாகும்.

இந்த ஆண்டில் ஏற்பட்டுள்ள பரப்பு அதிகரிப்பு முக்கியமாக ஐக்கிய மாகாணம், அஸ்ஸாம், பீஹார், மேற்கு வங்காளம், மத்திய மாகாணமும் பேரரும், சென்னை ஆகிய இடங்களில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. [illegible] [illegible] அனுகூலமாக இருந்தது, உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள் [illegible] [illegible] [illegible] இந்தமதிப்பீடு 1949 ஆகஸ்ட் இறுதியில் அல்லது 1949 செப்டம்பர் ஆரம்பம் வரையுள்ள [illegible] [illegible].

இந்தியப் பிரதேசம், மைசூர், ராஜஸ்தான் மத்தியபாரத்திலிருந்து பிரதேசம் ஆகியவைகளிலிருந்து புள்ளி விவரங்களும், இப்பொழுதுதான் முதல் தடவையாக இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதிகளில் ரஷ்யாவின் இராணுவ முஸ்தீபுகள்!

:(0):

கிழக்கு ஜெர்மனியில் விமானத் தளங்கள் நிறுவனமாம்

பெர்லின், டிச 30—

கிழக்கு ஜெர்மனியில் இராணுவ கடல் விமானத் தளங்களை அமைக்கும் திட்டத்தை ரஷ்யா துரிதமாக நடத்திவருவதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. பால்டிக் கடலோரப் பகுதிகளில் நாசகாரிகள், மோட்டார் டார்பிடோக்கள் முதலியன ரஷிய மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டு வருகின்றனவென்றும், முன்பு ஜெர்மன் விமானப்படை உபயோகித்து வந்த விமானக்கூடங்கள் தளங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றனவென்றும் செய்திகள் கூறுகின்றன. அநேகமாக இந்த முஸ்தீபுகளெல்லாம் கடற்கரையோரப் பிரதேசங்களிலேயே செய்யப்பட்டுவருகின்றன.

இனி நடப்பவை

சென்னை :—[illegible] 5—1—50 வியாழன் மாலை ஆறு மணிக்கு, வெள்ளாளர் வீதியில் கிருஷ்ணசாமி அவர்கள் இல்லத்தில், தோழர் கு. வடிவேலர்—சொழியர் மகேஸ்வரி, ஆகியோரின் செல்வன் 'இளங்கோவன்' முதலாண்டு விழா தோழர் [illegible] கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, டி. எஸ் வேலன், பி. துரைசாமி [illegible] இறையுடிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

திருச்சி,— [illegible] நிரவி மாணவர் முன்னேற்றச்சங்கத்தின் [illegible] செயற்குழு உறுப்பினர் கூட்டம், 4—1—50 மாலை 5-30 மணிக்கு [illegible] நடைபெறும்.

• • •

பள்ளிவன்னி (வ-ஆ)— 3-1-50 செவ்வாய் இரவு 9-30 மணிக்கு, தமிழ் மறுமலர்ச்சி நாடகக்குழுவினரால் "வீரத்தாய்" எனும் நாடகம் நடத்தப்பெறும். திருப்பத்தூர் ஆன்ரி மாதில் ரேட் தோழர் எம் என். ஜெயராமன் தலைமை வகிப்பார். நி. மு. சுதைத் தோழர்கள் பேசுவார்கள்.

ரஷ்ய வில்ராக்கெட் பரிசோதனை!

பெர்லின் ஜன 1—

பால்டிக் கடற்கரையில் பி[illegible] [illegible] ரஷ்யர்கள் ராக்கெட் பரிசோதனை ஆராய்ச்சி [illegible] ஆரம்பித்து [illegible] என்றும் [illegible] வி-1 [illegible] இருந்த [illegible] ஜெர்மனி ஷியர்கள் அவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறார்கள் என்றும் இங்கு தகவல் [illegible] கிடைத்திருக்கிறது.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் [illegible] எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

திருச்சியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்தாற்போல் பெக்காம் [illegible] தோழர் பழனிச்சாமியவர்கள் மாநாட்டைத் துவக்கி வைக்கும் வகையில் சிறப்புமிழச் சொற்பொழிவாற்றினார்.

மாநாட்டுக்குத் தோழர் [illegible] வெ. அ. வள்ளிமுத்து, அவர்களைத் தலைமையேற்கும்படி வரவேற்புக் கழகத் தலைவர் என். சங்கரன் முன்மொழிந்தார். தோழியர் ராமாமிர்தத்தம்மையார், தோழர்கள் க. அன்பழகன், [illegible] [illegible] எம். எஸ் சிவசாமி [illegible] [illegible] சி. என். அண்ணாதுரை ஆகியோர்வழிமொழிய, தோழர் வள்ளிமுத்து மாநாட்டுத் தலைமையேற்று [illegible] தலைமையுரை [illegible] நிகழ்த்தினார்.

[illegible] தோழர்கள் கே. பி [illegible] என். வி [illegible] ராசன், [illegible] வி. பி [illegible] சத்தம்பி இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் இயக்கத் திட்டங்கள் பற்றியும், ஆக்க வேலைகள் பற்றியும் விரிவாகப் பேசினர்.

இறுதியாக, [illegible] தோழர் [illegible] [illegible] பாடல் பாட, மாநாடு மற்றகல் நிகழ்ச்சிபகல் 1-மணிக்கு முடிவுற்றது.

மாநாடு மீண்டும் பிற்பகல் 2-மணிக்குத் துவங்கி 8 மணி வரை நடைபெற்று, இரவு 9 30 மணிக்கு [illegible] நாடகம் ஆரம்பமாகும்.

ஹாங்காங்கிற்குப் புது விமான நிலையம்

ஹாங்காங், ஜன. 1—

ஹாங்காங்கில் புதியதோர் விமான நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டனவென்று தெரிகிறது. இதற்காக ஹாங்காங் சர்க்கார் ஏற்கனவே 8,000 000 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] முடியுமாம்.

(வெளிநாடு)

[illegible], பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது. மானேஜர், "மாலை மணி"

உலகப் போக்கில் சலிப்பு கொண்ட பத்திரிகாசிரியர்களின் விபரீத முடிவு!

—(0)—

மன நிம்மதியடையும் வரை துறவறத்தில் துஞ்சுவராம்!

ரங்கூன், டிச 29

உலகப் போக்கில் சலிப்படைந்த இரு பர்மிய பத்திரிகாசிரியர்கள், தங்கள் மனம் நிம்மதியடையும் வரையில் துறவறத்திலேயே ஈடுபட முடிவு செய்துவிட்டனர்.

இவர்கள் பிக்ஷுக்களாக மாறிய சடங்குக்கு ஏராளமான பத்திரிகாசிரியர்களும், உறவினர்களும் வந்திருந்தனர். பின்னர் அவர்கள் ரங்கூன் தெருக்களில் ரிக்ஷாவில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, புத்தமடத்தில் தங்கி வசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் கியோபியா என்பவர் அமெரிக்கா சென்று பத்திரிகைத் தொழில் கற்று வந்தவர். 'ஓவே' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வந்தவர். மற்றொருவரான யூஸ்வான் அதே பத்திரிகையைச் சேர்ந்த ஹாஸ்ய எழுத்தாளர் ஆவர்.

ஜெருசலம் பற்றி அப்துல்லா

'வெற்றி அல்லது சாவு' என்கிறார்

அம்மான், டிச 31—

ஜெருசலம் அரபுக்களுடையதாகுமென்றும், அதை சர்வதேசக் கட்டுப்பாட்டிற்குள் விடுவதை அனுமதிக்க முடியாதென்றும் ஜோர்டன் மன்னர் அப்துல்லா சமீபத்தில் செய்த பிரசங்கமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதை கடைசிவரை எதிர்க்கப்போவதாகவும் இதில் ஒன்று 'வெற்றி அல்லது மரணம்' அடைவது நிச்சயம் என்றும் அவர் கூறினார்.

தூய உள்ளத்தோடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்காக ஒரு ஏற்பாடு எனக் கூறினர். விதம் விதமாக, புதிது புதிதாக விளக்கங்கள் தந்தார். அனைத்திற்கும் மாருக உழைத்துழைத்து அலுத்துப்போன ஆயிரக் கணக்கான உண்மை உழைப்பாளிகளைத் துரோகிகள் என்ருர். வாழ்க்கைத் துறையில் குறுக்கிட்ட பலப்பல தொல்லைகளையெல்லாம் பொருட்படுத்தாது இயக்கத்திற்காகவே அல்லும் பகலும் பாடுபட்ட நமக்கு, நமது தலைவரிடமிருந்து கிடைத்த பரிசுகள் வஞ்சகர்கள், சுயநலமிகள், சூழ்ச்சிக்காரர்கள், மோசடி செய்பவர்கள் என்பவைகள்தான்.

சுமார் 20 ஆண்டுகளாகவே தலைவர் பெரியார் அவர்களது உண்மைத் தொண்டர்கள் பலருள் ஒருவனுக, பலமான எதிர்ப்புகளிடையே முன்னின்று இயக்க கொள்கைகளை மக்களிடையே பரப்பி வந்த என் போன்ற உழைப்பாளிகள் தான், இன்று அவருக்கு ஊதாரிகளாகக் காணப்படுகிருர்கள்.

பெரியார் அவர்கள் நீதிக் கட்சித் தலைவரானவுடன், அவருக்காகவே கோவில்பட்டியில் ஓர் மாபெரும் மாநாட்டைக் கூட்டுவித்த எனக்கும் இன்று கிடைத்த பரிசு, சூழ்ச்சிக்காரனென்பது தான், என்ன என்போன்றவரது மனம் என்ன பாடுபடுமென எண்ணிப் பாருங்கள்.

1943-ம் ஆண்டில் நான் நகராட்சி மன்றத்தில் தலைமைப் பதவியேற்றதும் நேரே கோவில்பட்டி வந்து பலப்பல புகழுரைகள் தந்த பெரியார் தான் சகிக்க முடியாதபடி இகழுரைகள் கூறுகிருர்.

பாடுபட்டுப் பயனென்ன?

திருச்சி மாநாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ரூ 5000 நிதி திரட்டவேண்டுமென்றும், உறுப்பினர்கள் சேர்க்கவேண்டுமென்றும் தீர்மானித்ததையொட்டி, எங்கள் மாவட்டத்தில் உடனடியாக மேற்சொன்ன தொகையைச் சேகரித்து அவரிடம் அந்நிதியை மகிழ்ச்சியோடு கொடுத்தவர்கள் நாங்கள். அதனுல் என்ன பலன் கண்டோம் என்பது தான் தெரியவில்லை.

என்னைப் பெற்று வளர்த்த தாயார் மறைந்த மூன்ருவது நாள், ஆச்சாரியார் சென்னை வரும்போது பெரியார் அவர்கள் அவரைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பணித்ததும் சென்னை சென்று நிர்வாகக் குழுவின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட என்போன்ற உண்மைத் தொண்டர்கள், இன்று அவரது கண்களுக்குத் துரோகிகளாகக் காட்சி தருகிறோம்.

பெரியார் அவர்கள் அறிக்கைப்படி, கோவில்பட்டிக்கு வரும்போது கருப்புக்கொடி பிடித்தும், கட்டாய இந்தி மறுப்பு மறியல் செய்தும் அரசாங்கத்திற்குக் கண்டனம் தெரிவித்த குற்றத்திற்காக, நானும் என் நண்பர்களும் ஜாமீன் வழக்கில் சேர்க்கப்பட்டு, பெரியார் அவர்கள் கட்டளைப்படி சிறைத்தண்டனை அனுபவித்தவர்தாம். அப்போது காரணமின்றி சர்க்காரால் விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை மீறியதற்காகக் கும்பகோணத்தில் பெரியார் அவர்கள் கைது செய்யப்பட்டார். அது கேட்ட அறிஞர் அண்ணுத்துரையும் கும்பகோணத்திற்கு ஓடோடி வந்திருந்தார். ஆனுல் கைது செய்யப்பட்டு, பக்கத்திலிருந்தும் அய்யம்பேட்டைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பெரியார் அவர்களை போலீசார் விடுவித்து "நீங்கள் எங்கே செல்ல வேண்டு"மெனக் கேட்டபோது, 'மறுபடியும் கும்பகோணம் செல்வேன்; மறுபடியும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த!" என்று சொல்லியிருக்க வேண்டிய பெரியார் "நான் மதராஸுக்குப் போகிறேன்" என்று சொல்லிச் சென்றுவிட்டார். அதைக் கேட்ட நாங்கள் திடுக்கிட்டோம்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பின்போது "பெரியாரது உடல் நிலைக்குப் பெல்லாரி சிறையே ஏற்றது" என எக்காளமிட்ட அதே ராஜகோபாலாச்சாரியாரை, திருவண்ணுமலைக்குச் சென்று சந்தித்ததோடு, பெரியார் அவர்கள் அதே நேரத்தில் தெற்கு நோக்கி திரும்பி, "துரோகக் கூட்டமே! வேறென்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள்; இது எனது சொந்த விஷயம்" என்று கோபித்தார்.

சகிக்கமுடியா முரண்பாடுகள்

இயக்க நலன் என்றும் சொந்த விஷயம் என்றும் சொல்லி, அவர் செய்த முரண்பாடான ஏற்பாடுகளையெல்லாம் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. இயக்க வரலாற்றிலேயே சிறப்பான தூத்துக்குடி மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகத் தொண்டாற்றிய நான் துரோகியாம்! பெரியார் அவர்களாலேயே வருங்கால கவர்னர் எனப் புகழப்பட்ட தூத்துக்குடித் தோழர், கே. வி. கே. சாமி துரோகியாம்! பெரியார் கூப்பிட்ட குரலைத் தட்டாமல் ஓடிவரும் ஒருவர் உண்டென்ருல், அது தோழர், நீதிமாணிக்கமாகும். அவரும் ஒரு சதிகாரராம்! பெரியார் அவர்களின் பெருமதிப்பைப் பெற்ற விருதைத் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி, அருப்புக்கோட்டை தோழர், சிவசண்முகம் முதலியோர் சதிகாரர்களாம்! எதிர்கட்சிக்காரர்களின் சூழ்ச்சியினுல் மதுரையிலே கொளுத்தப்பட்ட மாநாட்டுப் பந்தலின் தீச்சுவாலையிலே சிக்குண்ட தோழர், மதுரை. முத்து அய்யாச்சாமி முதலியவர்கள் சூழ்ச்சிக்காரர்களாம்! இவர்களெல்லாம் சதிகாரர்களா? துரோகிகளா? இயக்கத்திலே பல ஆண்டுகளாக உழைத்து வரும் சேலம் தோழர் சித்தையன் சதிகாரரா? பெரியார் அவர்களால் கடைசியாக ஈரோட்டில் கூட்டப்பட்ட தனி மாகாண மாநாட்டிற்கு வரவேற்புக் குழு தலைவராக இருந்த தோழர் பொத்தாம்பாளையம் பழனிச்சாமி மோசடி செய்பவரா? கும்பகோணம் போராட்டத்தை நினைத்தாலே, தோழர் கே. கே. நீலமேகம் பெயர்தானே முன்னிற்கிறது? பெரியார் அவர்கள் வேண்டாம் என்று தடுத்தும், பொறுப்புள்ளவன் என்று கூறி சிறை சென்ற தோழர் நீலமேகம் ஓர் சதிகாரரா? நம் சமூகத்திலே தோன்றிய ஓரே புரட்சிக் கவிஞர் என்று பெரியாராலேயே போற்றப்பட்ட கவிஞர் பாரதிதாசனும் துரோகியா? படித்துப் பட்டம் பெற்று வேறு வேலை தேட மனமில்லாமல் இயக்க நலன் கருதி 'விடுதலை' பத்திரிகை நிலையத்தில் குறைந்த சம்பளத்திற்கு கடைசிவரை வேலை பார்த்திருந்ததோடு, பெரியாரது நம்பிக்கைக்குப் பாத்திரர்களுமாயிருந்த தோழர்கள் கணேசன், கோவிந்தசாமி, அரங்கண்ணல் முதலியோர்கள் சுயநலமிகளா? சேலம் மாநாட்டிலே பட்டம் பதவியாளர்களது எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்க பெரியார் அவர்களுக்காகப் பெரும்படை திரட்டிச் சென்ற பொன்மலை தோழர் பராங்குசம் சூழ்ச்சிக்காரரா? இயக்கம் தோன்றிய நாள் முதல் இதுவரை முக்கிய பங்கெடுத்துக் கொண்ட திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம், கோவை ஏ. பொன்னுச்சாமி அவர்களும் சந்தர்ப்பவாதிகளா? ஆச்சாரியார் மந்திரி சபையின் அடக்குமுறைக்கும் அஞ்சாது சிறை புகுந்து பகுத்தறிவு இயக்கத்தில் பல தாய்மார்களையும் பங்கெடுத்துக்கொள்ளச் செய்த தோழியர்கள் இராமாமிர்தத்தம்மையார், டாக்டர் தருமாம்பாள், சத்தியவாணிமுத்து முதலியோர் மோசடி செய்பவர்களா? இயக்கத்துப் பல நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்களான விருத்தாசலம் தோழர் முனுசாமி, திருவண்ணுமலை சேர்மன் ப. உ. சண்முகம், சென்னை சி. டி. பெரியசாமி முதலியோரெல்லாம் சூதுக்காரர்களா?

அண்ணுவுமா சூழ்ச்சிக்காரர்?

பெரியார் அவர்களது கருத்தே எனது கருத்தும் என முழக்கி, படித்த பல பெரியோர்களிடையேயும் இயக்கக் கொள்கைகளைப் புகுத்தி, அவர்களை நமது பகுத்தறிவுப் பாசறைக்கு இழுத்து வந்து, இயக்கப் பணிகள் பலவும் புரியச் செய்ததோடு, இந்நாட்டில் படித்த கூட்டத்தார், பகுத்தறிவு இயக்கமென்ருல் அஞ்சி ஓடியபோது ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு, ஓமந்தூரார் காலம் வரை பெரியார் அவர்களது பெரும் படையின் தளபதியாக நின்று போராடியவரும், அரசியல் அறிஞர் என்று பெரியாராலேயே போற்றப்பட்டவரும், ஈரோட்டுத் தனி மாநாட்டிற்குப் பெரியார் அவர்களாலேயே தலைவராக நியமிக்கப்பட்டவருமான தோழர் அண்ணுத்துரை அவர்களும் சூழ்ச்சிக்காரரா? சதிகாரரா? மோசடி செய்பவரா?

இயக்க நிதியால் எப்பயன் கண்டோம்?

இப்படிப்பட்ட பலப் பல உண்மை ஊழியர்களின் பல வருஷ கால உழைப்பையும் பாழாக்கும் விதத்தில் சொந்த விஷயம், இயக்க ஏற்பாடு என்று சொல்லி, அவர் செய்து கொண்ட திருமணத்தால் சில லட்சம் ரூபாயையும் நாம இழக்க வேண்டியதிருந்த போதிலும் அதற்காகக் கூட நாம் வருந்தவில்லை. அந்த சில லட்சக் கணக்கான ரூபாய்களும் அவரது தலைமையில் நாம் இருந்தவரை நமக்காக இயக்க வளர்ச்சிக்காக ஏதாவது பயன்பட்டதா? என்று நான் கேட்கிறேன். தமிழுக்காக உயிர் கொடுத்த தாளமுத்து நடராஜன்களின் குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய முடிந்ததா? பெருந்தலைவராயிருந்தும் இயக்க லட்சியத்திற்காகவே தனது மூதாதையரால் சேர்த்து வைக்கப்பட்ட பொருள் அனைத்தையும் பாழாக்கி உயிர் பிரியும் வரை பெரியார், பெரியார் எனக் கூறிப் பூரிப்படைந்த ஈரால் வேல் வெள்ளைச்சாமியை இழந்த குடும்பத்தாரைக் காக்க முடிந்ததா? மரக்கிளையிலே பிணமாகத் தொங்கிய இலட்சிய வீர ஆசிரியர் வேலாயுதத்தின் துணைவியாருக்கு, அருமை மகளுக்கு இப்பணத்திலிருந்து ஒரு சிறு நிதியாவது கொடுத்துதவ முடிந்ததா?

எப்படி நம்ப முடியும்?

சீர்திருத்தமென்ருல் நாடு இன்னதென்றறியாத காலத்திலேயே சுயமரியாதை இயக்கத்தின் தோற்றத்திலிருந்து அதில் பெரும் பங்கெடுத்துக் கொண்டு பல எதிர்ப்புகளுக்கிடையே கல்லடியும், சொல்லடியும் பட்டுக்கொண்டு, பல ஆயிரக்கணக்கான மேடைகளில் நின்று பட்டிதொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் பகுத்தறிவுப் பிரசாரம் செய்து, அதன் காரணமாகவே கொடும் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தும், ஆச்சாரியார் சென்னை வரும்போது அவரைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பெரியார் அவர்கள் அறிக்கை விடுத்ததும் ஓடோடிவந்து சிறைவாசம் அனுபவித்துப், ஈரோடு மாநாட்டில் எழுந்து நிற்க முடியாத நிலையிலும் கலந்து கொண்டு இதுவே தான் கடைசி மாநாடு என்று சொல்லி, உயிர் நீத்த மாவீரன் பட்டுக்கோட்டை அழகிரிசாமியை இழந்து வருந்தும் அவரது அருமை குடும்பத்தாருக்கு ஒரு சிறு உதவியேனும் செய்ய அந்தப் பணம் பயன்பட்டதா? உழைப்பையே உயிராகக் கொண்ட பெருந் தியாகிகள் பலரை இழந்த போதும் உதவாத இந்தச் சில லட்சரூபாய்களையா நாம் பெரிதாக மதிக்க முடியும்? நினைத்தால் ஓரே நாளில் சேகரிக்கக்கூடிய இந்தப் பணத்திற்காக, எந்தக் கொள்கைக்காக இதுவரை தியாகிகள் பலர் உயிர் நீத்தனரோ அந்தக் கொள்கை பலியாக்கப்படுவதைக் கண்டு நாம் சகித்துக்கொண்டிருக்க முடியுமா? தாலமுத்து நடராசன் குடும்பத்தாருக்கு உதவ முடியாத இந்தப் பணம், ஆசிரியர் வேலாயுதத்தின் மனைவியாருக்கு உதவித் தொகையாகக் கொடுக்க முடியாத இந்தப் பணம், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் அடயக்குரலிலும் ஆறுதலளிக்கமுடியாத இந்தப் பணம் பிற்கால இயக்க நலனுக்காக ஏற்பாடு செய்து வைக்கப்படுகிறதென்ருல் என்போன்ற பகுத்தறிவுவாதிகள் அதை எப்படி நம்ப முடியும்? பெரியார் அவர்களது பணியை மறந்துகொண்டு எண்ணற்ற தோழர்கள் அன்னக்காவடிகளாக இருக்கிருர்கள் என்பதை பெரியார் அறியமாட்டாரா? அறிந்தும் இவ்வளவு பெரிய நம்பமுடியாத ஏற்பாடு ஏன்?

இலட்சியப் பாதையின் முதல் விளக்கு!

ஆகவே ஜனநாயகப் பண்பைப் பாழாக்கும் அவரது தலைமையினின்றும் நீங்கி, அவர் கண்ட கொள்கைகளை நாட்டில் பரப்பி, ஆரியத்தை அழிக்க, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்க, வருணாச்சிரமத்தை வீழ்த்த, சமுதாயத்தைச் சீர்படுத்த, அறியாமையை அகற்ற, பகுத்தறிவை வளர்க்கவே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கியுள்ளோம். இது எவரது சுயநலம் காரணமாகவோ, தூண்டுதலாலோ ஏற்பட்டதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு வானவில் அல்ல என்பதற்கு அது துவக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள்ளாகவே 381 கிளைகள் முளைத்திருப்பதே போதுமான சான்ருகும். நமது லட்சியப் பாதையின் முதல் விளக்கே இம்மாநாடு. இன்னும் நாம் சேரவேண்டிய இடம் வெகு தொலைவில் உள்ளது. பெரியார் புகட்டிய பகுத்தறிவின் துணைகொண்டு அரசியல் பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றில் முன்னேற வேண்டியது நமது கடமையாகும். (தொடரும்)

அனுரின்பெவான் இந்திய வருகை ஒத்திவைப்பு

லண்டன், ஜன. 1—

பண்டித நேருவின் அழைப்பின் பேரில் பிரிட்டிஷ் சுகாதார மந்திரி அனுரின் பெவான் இந்தியாவுக்கு வருகை தர இருந்தது இப்பொழுது ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

காமன்வெல்த் மாநாட்டை உத்தேசித்து [illegible] முதலிய மந்திரிகள் லண்டனை விட்டு புறப்படுவதால் அவர் பிரிட்டனில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது அவர் வருகை ஒத்திவைப்புக்கு ஒரு காரணம் என்று தெரிகிறது. மேலும் பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் சில செய்யப்பட வேண்டியிருக்கிறதாம்.

பெவான் இவ்வாண்டிற்குள் எப்படியும் இந்தியாவுக்கு வருவார் என்றும் பிரிட்டனில் தொழிற் கட்சிய அதிகாரத்திலிருக்கும் [illegible] மந்திரி என்ற முறையிலேயே அவர் வருகை உத்தியோக பூர்வமானதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அறிவிப்பு

ரெஜிஸ் மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணு ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்பமுதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.